**Asylum Support Partnership**
**help and advice**

January 2010 Tamil

# அடைக்கலம் நாடும் பெற்றோர்களுக்கு மகப்பேற்று தொகையளிப்புகள்

யூகே எல்லை முகமை (UK Border Agency - UKBA) யிடமிருந்து நீங்கள் அடைக்கல உதவி பெறுபவராக இருந்தால், மற்றும் நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது மூன்று வயதிற்குக் குறைவான குழந்தைகளை ஏற்கனவே உடையவராக இருந்தால், கூடுதல் பணம் பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும். நீங்கள் பெறுகின்ற உதவியின் அடிப்படையில் என்ன தொகையளிப்புகள் கிடைக்கும் மற்றும் அவற்றைப் பெறுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை இச்சிற்றேடு விளக்குகிறது. கூடுதல் உதவி அனைத்தையும் பெறுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் கீழே விளக்கப்பட்டுள்ள வழிமுறைகள் அனைத்தையும் நீங்கள் பின்பற்ற வேண்டும்.

## கூடுதல் வாராந்திர ரொக்கத் தொகையளிப்புகள்

நீங்கள் கருவுற்றிருக்கும்போதும் மற்றும் உங்களுக்குக் குழந்தை பிறக்கும்போதும் நீங்கள் UKBAவிடமிருந்து கூடுதல் தொகைகளைப் பெறமுடியும். நீங்கள் கருவுற்றிருக்கும்போது ஒவ்வொரு வாரமும் கூடுதலாக 3 பவுண்டுகளை நீங்கள் கேட்கலாம். உங்களுக்குக் குழந்தை பிறந்தவுடன், அவன் அல்லது அவளுக்கு ஒரு வயதாகும்வரை, ஒவ்வொரு வாரமும் கூடுதலாக 5 பவுண்டுகள் பெறுவதற்கு உங்களுக்குத் தகுதி உண்டு. உங்கள் குழந்தைக்கு ஒரு வயதாகும்போது, அதற்கு மூன்று வயதாகும்வரை ஒவ்வொரு வாரமும் கூடுதலாக 3 பவுண்டு பெறுவதற்கும் உங்களுக்குத் தகுதி உண்டு. உங்கள் குழந்தைக்கு மூன்று வயதாகும்போது, கூடுதல் உதவித் தொகையளிப்பு நின்றுவிடும் மற்றும் உங்கள் வாராந்திர உதவித் தொகையானது தற்போது பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்காக உள்ள UKBAவின் வாராந்திர படியாக இருக்கும்.

நீங்கள் பிரிவு 4 உதவி (Section 4 support) பெறுபவராக இருந்தால், இதைப்போன்ற தொகையளிப்புகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். மேலும், உங்கள் குழந்தை பிறந்தவுடன், அதற்கு 16 வயதாகும்வரை உங்கள் குழந்தையின் உடைகளுக்கான செலவுகளுக்காக ஒவ்வொரு வாரமும் 5 பவுண்டு கூடுதலாகப் பெறுவதற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். கூடுதல் தொகையளிப்புகள் அனைத்தும் உங்கள் Azure அட்டை தொகையளிப்புகளுடன் சேர்க்கப்படும். உங்களுக்கு ஏற்கனவே 18 வயதிற்குக் குறைவான குழந்தைகள் இருந்தால், உங்கள் Azure அட்டையில் ஒரு வாரத்திலிருந்து அடுத்த வாரத்திற்கு நீங்கள் தொடர்ந்து எடுத்துச் செல்லக்கூடிய உதவித் தொகையின் அளவிற்கு வரம்பு எதுவும் கிடையாது. இது உங்கள் முதல் குழந்தையாக இருந்தால், உங்களுக்கு மகப்பேற்று மானியம் வழங்கப்பட்ட உடனேயே 5 பவுண்டை தொடர்ந்து எடுத்துச் செல்லக்கூடிய வரம்பை UKBA நிறுத்திவிடும்.

## ஒரே நேர கூடுதல் மகப்பேற்று மானியம்

குழந்தை பிறந்தவுடன் மற்றும் நீங்கள் சாதாரண அடைக்கல உதவி பெறுபவராக இருந்தால், குழந்தைக்கான உடைகள் மற்றும் பொருட்களை வாங்குவதற்கு ஆகும் செலவுகளுக்காக நீங்கள் ஒரே நேர கூடுதல் தொகையான 300 பவுண்டுகள் பெறுவதற்கும் தகுதி உள்ளவராவீர்கள். உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் 300 பவுண்டுகள் வீதம்,



Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT no: 936 519 988

OISC No: N200100132
Community Legal Service

600 பவுண்டுகள் பெறுவற்கும் உங்களுக்குத் தகுதி உண்டு. உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன் ஆறு வாரங்களுக்குள்ளாக அல்லது குழந்தை பிறந்த பிறகு இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகாமல் நீங்கள் இதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் பிரிவு 4 உதவி பெற்றுக் கொண்டிருந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரே நேர கூடுதல் தொகையளிப்பான 250 பவுண்டுகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தால், 500 பவுண்டுகள் பெறுவற்கு உங்களுக்குத் தகுதி உண்டு. இது உங்கள் Azure அட்டை தொகையளிப்புகளுடன் சேர்க்கப்படும். உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன் எட்டு வாரங்களுக்குள்ளாக அல்லது குழந்தை பிறந்த பிறகு ஆறு வாரங்களுக்கு மேல் ஆகாமல் நீங்கள் இதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

## நான் என்ன செய்ய வேண்டும் மற்றும் எப்போது?

இத்தொகையளிப்புகளை பெறுவதற்கு நீங்கள் ஒரு கையெழுத்திட்ட, எழுத்துமூல கோரிக்கையை UKBAவுக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் UKBAவிடமிருந்து பிரிவு 4 உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தால், இக்கோரிக்கைகள் அனைத்தையும் பிரிவு 4 கூடுதல் தொகையளிப்புகளுக்கான படிவத்தில் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் பொருந்தும் அனைத்துப் பெட்டிகளிலும் சரிக்குறியிட வேண்டும். கோரிக்கைகள், உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அடைக்கல ஆலோசனையாளருக்கு (case owner) அனுப்பப்பட வேண்டும். உங்களுக்கு ஓர் அடைக்கல ஆலோசனையாளர் இல்லாவிட்டால், நீங்கள் UKBAவின் மண்டல அலுவலகத்திற்கு எழுத வேண்டும்.

எந்தவொரு கோரிக்கைக்கும், நீங்கள் அசல் ஆவணங்களை அனுப்ப வேண்டும் மற்றும் அதை UKBA உங்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடும். உங்கள் பதிவுகளுக்காக உங்கள் கோரிக்கை மற்றும் உங்கள் ஆவணங்களின் நகல் ஒன்றை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அனைத்து கோரிக்கைகளையும் மற்றும் அசல் ஆவணங்களையும் 'பதிவுசெய்யப்பட்ட ஒப்படைப்பின்' ('recorded delivery') மூலம் நீங்கள் அனுப்ப வேண்டும் (இதைப்பற்றி அஞ்சலகத்தில் கேட்கவும்).

இவ்விண்ணப்பங்களை தயார் செய்வதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்கள் உள்ளூர் அகதி அமைப்பைத் தொடர்பு கொள்ளவும்.

### நீங்கள் கருத்தரிக்கும்போது:

உங்கள் UKBA அடைக்கல ஆலோசனையாளருக்கு மகப்பேற்று தொகையளிப்பான 3 பவுண்டுகள் மற்றும் ஒரே நேர மகப்பேற்று மான்யமான 300 பவுண்டு/250 பவுண்டுக்கான கோரிக்கையை எழுதி, உங்கள் மருத்துவர் அல்லது மகப்பேற்று செவிலியரிடமிருந்து நீங்கள் கருவுற்றிருப்பதையும் மற்றும் குழந்தை பிறப்பு எதிர்பார்க்கப்படும் தேதி (மகப்பேற்றுக்கான தேதி)யையும் உறுதி செய்கின்ற கடிதம் அல்லது MATB1 படிவத்தைப் பெற்று இதனுடன் சேர்த்து அனுப்பவும்.

UKBA குறிப்பிடும் காலவரையறைக்குள் மகப்பேற்று மான்யத்திற்கு கோரிக்கை அளிப்பதை நினைவில் கொள்ளவும்:

- நீங்கள் சாதாரண அடைக்கல உதவியைப் பெறுபவராக இருந்தால், குழந்தை பிறப்பதற்கு முன் ஆறு வாரங்களுக்குள்ளாக அல்லது குழந்தை பிறந்த பிறகு இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகாமல் 300 பவுண்டுகளுக்கு கோரிக்கை அளிக்கவும்.
- நீங்கள் பிரிவு 4 உதவி பெற்றுக் கொண்டிருந்தால், உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன் எட்டு வாரங்களுக்குள்ளாக அல்லது குழந்தை பிறந்த பிறகு ஆறு வாரங்களுக்கு மேல் ஆகாமல் 250 பவுண்டுகளுக்கு கோரிக்கை அளிக்கவும்.

நீங்கள் மிகவும் முன்னதாகவே விண்ணப்பித்தால், விண்ணப்பத்தை UKBA பரிசீலிக்காமல் போகக்கூடும். காலவரையறைகளுக்குள் நீங்கள் மீண்டும் அதை அனுப்ப வேண்டியிருக்குமா என்பதை தயவுசெய்து சரிபார்க்கவும். சில சூழ்நிலைகளில், குழந்தை பிறப்பதற்குமுன் மகப்பேற்று

தொகையளிப்பை UKBA வழங்காமல் போவதுடன், குழந்தை பிறந்துள்ளதை உறுதிப்படுத்தும் சான்றையும் கேட்கக்கூடும் (உம். பிறப்புச் சான்றிதழ் [birth certificate]).

**கொடுக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் நீங்கள் விண்ணப்பிக்காவிட்டால் நீங்கள் தொகையைப் பெறமாட்டீர்கள் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.**

## உங்கள் குழந்தை பிறந்தவுடன்:

இயன்றவரை விரைவாக உங்கள் பதிவு அலுவலகத்திற்குச் சென்று பிறப்பைப் பதிவு செய்யவும். அவர்கள் உங்களுக்கு ஓர் இலவச 'சுருக்கமான' பிறப்புச் சான்றிதழை அளிப்பார்கள். ஒரு சிறிய கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கூடுதல் விவரங்கள் அடங்கிய ஒரு 'விரிவான' பிறப்புச் சான்றிதழையும் நீங்கள் பெறமுடியும். **நீங்கள் இரண்டு சான்றிதழ்களையும் பெற வேண்டியது அவசியமாகும்.** நீங்கள் பிரிவு 4 உதவியில் இருந்தால், விரிவான பிறப்புச் சான்றிதழுக்கு கட்டணம் செலுத்துவதற்காக நீங்கள் UKBAவிடம் பணம் தரும்படி கேட்கலாம்.

நீங்கள் பெறும் உதவியுடன் உங்கள் குழந்தையும் சேர்க்கப்படுவதை உறுதி செய்வதற்கு, ஓர் எழுத்துமூல கோரிக்கையில் கையெழுத்திட்டு. அதனை உங்கள் அடைக்கல ஆலோசனையாளருக்கு நீங்கள் அனுப்ப வேண்டும். நீங்கள் அதனுடன் 'விரிவான' பிறப்புச் சான்றிதழையும் இணைக்க வேண்டும். விண்ணப்பத்தை UKBA பெற்றவுடன், மேலே விளக்கப்பட்டுள்ள தொகையளிப்புகளை உங்கள் அடைக்கல உதவியுடன் அது சேர்த்துவிடும்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் தொகையளிப்புகள் தொடங்கப்படாவிட்டால், உங்கள் உள்ளூர் அகதி அமைப்பைச் சென்று பார்க்கவும்.

தாய் இல்லாத நிலையில் இளம் குழந்தைகளை பராமரிக்கும் தனி தந்தைகளும்கூட கூடுதல் உதவிக்கு விண்ணப்பிப்பதற்காக இந்த வழிமுறைகளைப் பின்பற்றலாம்.



North of England Refugee Service, charity number: 1091200 www.refugee.org.uk
Refugee Action, charity number: 283660 www.refugee-action.org.uk
Refugee Council, charity number: 1014576 www.refugeecouncil.org.uk
Scottish Refugee Council, charity number: SC008639 www.scottishrefugeecouncil.org.uk
Welsh Refugee Council, charity number: 1102449 www.welshrefugeecouncil.org